சுற்றுலா தலங்களில் குவிந்த மக்கள்



► கோடை வெயில் சுட்டெரித்து வருவதால் உடலையும் மனதையும் ஜில் பன்ன சுற்றுலாதலங்களில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். நேற்று விடுமுறை தினம் என்பதால் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. முதல்படம்: சுற்றுலா பயணிகள் கொடைக்கானல் நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்தனர். அடுத்தப்படம்: ஒகேனக்கல்லில் உள்ள மெயின் அருவிகளில் ஆனந்தமாக குளித்து மகிழும் மக்கள். கடைசி படம்: ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் குவிந்த மக்கள் கூட்டம்.

தனித்திறனை ஊக்கப்படுத்தினால் பெரும் மகிழ்ச்சி

பிடிக்காதவற்றை நாம் தவிர்ப்பதே குழந்தைகளுக்கு மனநிறைவு தரும்

■ சிறப்பு செய்தி

குழந்தைகள் என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால், குழந்தைகளுக்கு யாரை பிடிக்கும் என்பது குறித்து யாரும் முழுமையாக அறிந்து கொள்ள விரும்புவதில்லை. குறிப்பாக 73சதவீதம் பெற்றோர், தங்கள் குழந்தைகளுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுக்கின்றனர். ஆனால், அது குழந்தைகளுக்கு முழுமையான மனநிறைவையும், மகிழ்ச்சியையும் தருகிறதா? என்றொரு கேள்வி எழுகிறது. இது குறித்து பல்வேறு ஆய்வுகளும் நடந்து வருகிறது. இது குறித்து குழந்தைகள் நலன் சார்ந்த உளவியல் அமைப்புகள் பல்வேறு தகவல்களை வெளியிட்டு வருகிறது.



உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்

குழந்தைப்பருவம் என்றால், எந்த வயதிலிருந்து எந்த வயதுவரை என்பதற்கு பல வரைமுறைகள் உள்ளது. அனைத்து தேவைகளுக்கும் பெரியவர்களை சார்ந்து இருப்பவர்கள் தான், குழந்தைகள் என்று எளிமையாக சொல்லி விடலாம். தங்களை சார்ந்திருக்கும் குழந்தைகள், அவர்களது வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். இதற்கான நல்ல வழிகாட்டுதல்களை வழங்க வேண்டியது பெற்றோரின் கடமையாக உள்ளது.

ஆனால் குழந்தைகளை தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வளர்ப்பது தான், சிறந்த வளர்ப்பு என்று 80 சதவீதம் பெற்றோர் நினைக்கின்றனர். இதை மனதில் வைத்தே, பல்வேறு குழந்தை உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இது குறித்து குழந்தைகள் நலன் சார்ந்த உளவியல் நிபுணர்கள் கூறியதாவது:

குழந்தைகளை பாசத்துடன் வளர்ப்பதற்கும், செல்லம் கொடுத்து வளர்ப்பதற்கும் உள்ள வேறுபாடு, பலருக்கு தெரியவில்லை. அதே போல், குழந்தைகளின் திறன்களை வளர்ப்பதற்கு பதில், தங்களது ஆசைகளை அவர்கள் மீது திணிக்கும் பெற்றோரே அதிகம் உள்ளனர். குழந்தைகளுக்கு பிடித்த எல்லாவற்றையும் செய்து கொடுப்பது என்பது, அனைத்து பெற்றோராலும் முடியாத காரியம். ஆனால், குழந்தைகளுக்கு பிடிக்காதவற்றை தவிர்ப்பது என்பது அனைவருக்கும் எளிதான செயல். வீட்டுக்கு வரும் உறவினர்கள் முன்பு ஏபிசிடி, ரைம்ஸ் சொல்ல வேண்டும் என்பது 87 சதவீதம் குழந்தைகளுக்கு பிடிக்காத செயலாக உள்ளது.

அதே போல், பள்ளி முடிந்து வீட்டிற்குள் நுழைந்தவுடன், பாடம் குறித்து கேட்கும் பெற்றோரை 84 சதவீத குழந்தைகளுக்கு பிடிக்கவில்லை. தங்களது சொந்த சகோதர, சகோதரிகளுடனும், மற்றவர்களுடனும் ஒப்பிடுவதை, 82 சதவீதம் குழந்தைகள் வெறுக்கின்றனர். அதேபோல், தாங்கள் செய்யும் தவறுகளை மற்றவர்கள் முன்பு கூறும் போது, அவர்கள் கூனிக்குறுகி நிற்கின்றனர். இது 92சதவீதம் குழந்தைகள் மனதில் கடும் அதிருப்தியான நிகழ்வாகவே பதிந்து விடுகிறது.

சனி, ஞாயிறு விடுமுறையில் படிக்கச் சொல்வதையும், கோடை விடுமுறையில் வற்புறுத்தி இதர பயிற்சிகளுக்கு அனுப்புவதையும், 79சதவீதம் குழந்தைகள் விரும்பவில்லை. இதை தங்களுக்கு தரும் ஒரு தண்டனையாகவே குழந்தைகள் நினைக்கின்றனர். இதே போல், மதிப்பெண்களை துரத்தும் பந்தயக் குதிரைகளாக இருப்பதையும் 85சதவீத குழந்தைகள் விரும்பவில்லை. இவை அனைத்திற்கும் மேலாக, தங்களது தனித்திறன்களை யாராவது கண்டறிந்து பாராட்டி ஊக்கப்படுத்தினால், 94சதவீதம் குழந்தைகள் பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர் என்பது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இந்த வகையில், குழந்தைகளுக்கு பிடித்தவற்றை எல்லாம் வாங்கிக் கொடுக்காவிட்டாலும், அவர்களுக்கு பிடிக்காதவற்றை எல்லாம் நாம் தவிர்த்தாலே, அவர்கள் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இருப்பார்கள் என்பதை ஆய்வு முடிவுகள் உணர்த்தியுள்ளது.

இவ்வாறு உளவியல் நிபுணர்கள் கூறினர்.

நவீனங்களின் பிடியில் சிக்கிக்கொள்வது ஏன்?

பக்கத்து வீட்டுக்கு செல்லக்கூடாது. தெருவில் விளையாடக்கூடாது. ஆடை அழுக்காக கூடாது என்றெல்லாம், இப்போது பெற்றோர் விதிக்கும் கட்டுப்பாடுகள் ஏராளமாக உள்ளது. இதனால், வேறுவழியின்றி அவர்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் ஸ்மார்ட் போன், லேப்டாப், தொலைக்காட்சி போன்றவற்றில் அதிக நாட்டம் கொள்கின்றனர். ஒரு சில பெற்றோர், எந்த தொல்லையும் இல்லாமல், நாம் நிம்மதியாக இருக்கலாம் என்ற சிந்தனையில் குழந்தைகளுக்கு இவற்றை வாங்கிக் கொடுக்கின்றனர். இந்த வகையில் நவீனங்களின் பிடியில் குழந்தைகள் சிக்கி கொள்வதற்கு, பெற்றோரும் ஒரு காரணம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2 மாதங்களுக்கு பிறகு

பெரியாறு நீர் மின்நிலையத்தில் மின்சார உற்பத்தி தொடக்கம்

கூடலூர், ஜூன் 3: லோயர் கேம்பில் உள்ள பெரியாறு நீர் மின் உற்பத்தி நிலையத்தில், இரண்டு மாதங்களுக்குப்பின் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

பெரியாறு நீர் மின் உற்பத்தி திட்டம் 1959 அக்டோபர் 2ம் தேதி தொடங்கப்பட்டது. இதன்படி பெரியாறு அணையிலிருந்து தமிழகப்பகுதிக்கு திறந்து விப்படும் தண்ணீரில் 1,600 கனஅடி தண்ணீரை 4 பென்ஸ்டாக்பைப் மூலம் கொண்டு வந்து, தலா 35 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் 4 இயந்திரங்கள் மூலம் 140 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதற்காக லோயர்கேம்பில் 'பெரியாறு நீர் மின் நிலையம்' தொடங்கப்பட்டது.

தற்போது இதிலுள்ள பழைய இயந்திரங்கள் அனைத்தும் மாற்றப்பட்டு தலா 42 மெகாவாட் என 168 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் படி அமைத்துள்ளனர். இந்த ஆண்டு பெரியாறு அணையில் நீர் மட்டம் குறைந்ததால், தமிழகப்பகுதிக்கு குடிநீருக்கு மட்டுமே தண்ணீர் இரைச்சல்பாலம் வழியாக திறக்கப்பட்டது. அதனால் கடந்த ஏப்ரல் முதல் பெரியாறு நீர் மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டது.

► லோயர்கேம்பில் உள்ள பெரியாறு நீர் மின் உற்பத்தி நிலையம்

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் தமிழகப்பகுதிக்கு முதல்போக விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. தமிழகப்பகுதிக்கு திறக்கப்பட்ட தண்ணீரின் அளவும் வினாடிக்கு 100 கனஅடியிலிருந்து 300 கனஅடியாக அதிகரித்துள்ளது. இந்த 300 கனஅடி தண்ணீரும் பென்ஸ்டாக்பைப் மூலம் கொண்டு வரப்பட்டு, நேற்று முதல் பெரியாறு நீர் மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள முதல் ஜெனரேட்டர் மூலம், 30 மெகாவாட் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

மேட்டூரில் 810 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தம்

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. முதல் பிரிவில் தலா 210 மெகாவாட் திறன் கொண்ட நான்கு அலகுகளும், 2வது பிரிவில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு அலகும் செயல்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் 1440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். தற்போது காற்றாலை மின் உற்பத்தி அதிகரித்து உள்ளதால், மேட்டூர் அனல் மின் நிலையத்தில், 2வது பிரிவில் 600 மெகாவாட் மின் உற்பத்தி முழுமையாக நிறுத்தப்பட்டது. முதல் பிரிவில் 4வது அலகில் மட்டும் 210 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. மின் தேவை அதிகரித்தால், மீண்டும் மின் உற்பத்தி துவக்கப்படும் என அனல் மின் நிலைய பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உடல்நலம் பாதிப்பு

யானைக்கு 4வது நாளாக சிகிச்சை

கோவை, ஜூன் 3: கோவை மருதமலை வனப்பகுதியில் உடல்நிலை பாதித்த தாய் யானைக்கு வனத்துறையினர் 4வது நாளாக சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கோவை வனச்சரகத்திற்கு உட்பட்ட மருதமலை அடிவாரம் வனப்பகுதியில் கடந்த 30ம் தேதி வனப்பணியாளர்கள் ரோந்து பணியின் போது 40 வயது மதிக்கத்தக்க பெண் யானை ஒன்றும், 3 மாத குட்டியுடன் இருந்தது கண்டறியப்பட்டது. இந்நிலையில், 40 வயது பெண் யானை உடல்நலம் பாதிக்கப்பட்டு கீழே படுத்து இருந்தது. இதையடுத்து, வனத்துறையின் கால்நடை மருத்துவ குழுவினர் உடல் நலம் பாதித்த பெண் யானைக்கு சிகிச்சை அளித்தனர். அப்போது தாய் யானையை பிரியாமல் குட்டி யானை அதன் அருகிலேயே இருந்தது.

மேலும், நிற்க முடியாமல் இருந்த யானையை கிரேன் மூலம் தூக்கி நிறுத்தி சிகிச்சை அளித்து வந்தனர். தொடர் சிகிச்சையால் யானையின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. தற்போது யானை சுறுசுறுப்பாக காணப்படுகிறது.

தாய் யானையுடன் கடந்த 4 நாட்களாக இருந்து வந்த குட்டி யானை 1ம் தேதி அதிகாலை தாயைவிட்டு பிரிந்து, தனது சகோதர யானையுடன் வனத்திற்குள் சென்றது. குட்டியானை சென்றதால் தாய் யானை தவிப்புக்குள்ளானது. இதனால், வனத்துறையினர் டிரோன் கேமிரா மூலம் குட்டி யானையை தேடி வருகின்றனர்.

உடல்நலம் பாதித்து இருந்த பெண் யானையின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதற்கு மசாலா புல், ஆலை இலை, அரச இலை, பழங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

► கிரேன் இயந்திரம் உதவியுடன் யானையை நிற்க வைத்து 4வது நாளாக சிகிச்சை அளிக்கும் வனத்துறையினர்.

பாலத்தின் தடுப்பு சுவரை உடைத்து

பள்ளத்தில் கார் பாய்ந்து சென்னை தம்பதி பலி

மகள் படுகாயம்

மணப்பாறை, ஜூன் 3: திருச்சி அருகே நேற்று காலை பால தடுப்பு சுவரில் கார் மோதி பள்ளத்தில் கவிழ்ந்ததில் தம்பதி உயிரிழந்தனர். அவர்களது மகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியை சேர்ந்தவர் சசிதரன் (41). இவர், தனது மனைவி ராஜஸ்ரீ (40), மகள் ருதீஸ் (13) ஆகியோருடன் நேற்று முன்தினம் இரவு தங்களது காரில் பூந்தமல்லியில் இருந்து பழனிக்கு சென்று கொண்டிருந்தனர். காரை சசிதரன் ஓட்டினார். இந்நிலையில் நேற்று காலை திருச்சி மாவட்டம் மணப்பாறைக்கு முன்னதாக திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அஞ்சாலிகளம் என்ற இடத்தில் வந்தபோது கட்டுப்பாட்டை இழந்த கார், தாறுமாறாக சென்று சாலையோரத்தில் உள்ள பால தடுப்பு சுவரில் மோதி 10 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் காரின் முன்பகுதி தீப்பற்றியது. இதை கண்ட அப்பகுதி மக்கள் தண்ணீர் ஊற்றி காரில் ஏற்பட்ட தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த மணப்பாறை போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் காரிலிருந்த ராஜஸ்ரீ மற்றும் சிறுமியை மீட்டு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் காரின் முன் பகுதி முழுவதும் சேதமடைந்ததால் சசிதரன் கால்கள் இரண்டும் இடிபாட்டுக்குள் சிக்கிக் கொண்டது. தீயணைப்பு வீரர்கள் அவரை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சசிதரன் பரிதாபமாக இறந்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலே ராஜஸ்ரீயும் சிகிச்சை பலனின்றி இறந்தார். இதில் அவர்களது மகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்துகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

► விபத்துக்குள்ளான கார்.

► சசிதரன்

► ராஜஸ்ரீ

ஆற்றுக்குள் விழுந்த கார்

கள்ளக்குறிச்சியை சேர்ந்த சிவபாலன்(35), சுந்தர் (37) உள்பட 5 பேர் காரில் நேற்று முன்தினம் இரவு கடலூர் கலெக்டர் அலுவலகம் எதிரே தென்பெண்ணை ஆற்று தரைப்பாலத்தின் வழியாக புதுச்சேரி பகுதியான கொமந்தான்மேடு கிராமத்துக்கு சென்றனர். ஏற்கனவே அங்குள்ள ஆற்று பாலத்தில் உடைப்பு ஏற்பட்டு எச்சரிக்கை பலகைகள் இல்லாமல் இருந்த நிலையில் அவ்வழியாகச் சென்ற கார், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து திடீரென்று ஆற்றுக்குள் பாய்ந்தது.

இதையடுத்து காரில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை தொடர்ந்து சத்தம் கேட்டு அங்கு வந்த அக்கம் பக்கத்தினர் 5 பேரையும் காயங்களுடன் மீட்டனர். பின்னர் சிறிது நேரத்தில் கார் முழுவதும் தண்ணீரில் மூழ்கியது. இதையடுத்து அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் நேற்று காலை ஆற்றில் மூழ்கிய காரை போலீசார் கிரேன் உதவியுடன் மீட்டனர்.

ஆண்டிபட்டியில் ஆச்சர்யம்

வெள்ள காக்கா பறக்குது பாரு...

ஆண்டிபட்டி, ஜூன் 3: ஆண்டிபட்டி பகுதியில் தென்பட்ட வெள்ளை காகங்களை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் கண்டு ரசிக்கின்றனர்.

காகங்கள் கருப்பு நிறத்தில் இருப்பதை தான் பார்த்து இருப்போம். கிராமங்களில் வேடிக்கை பேச்சுக்காக 'வெள்ள காக்கா பறக்குது பாரு' என கூறுவது உண்டு. ஆனால் வெள்ள காக்கா என்பது இல்லாத விஷயம் அல்ல; 'இல் பொருள் உவமையும் அல்ல' என உலகிற்கு உணர்த்தும் விதமாக அவ்வப்போது வெள்ளை காகங்கள் நடமாட்டம் குறித்த செய்திகளும் வெளி வந்து கொண்டு தான் இருக்கின்றன.

அந்த வகையில் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள கொப்பையம்பட்டியில் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள மரங்களில் மூன்று வெள்ளை காகங்கள் உலாவருகின்றன. மற்ற காகங்களுடன் சேர்ந்து சுற்றிவரும் இந்த மூன்று வெள்ளை காகங்களை ஊர் மக்கள் பார்த்து ரசிக்கின்றனர். மற்ற காகங்களைப் போல் இல்லாமல் இதன் ஒலியும் வித்தியாசமாக உள்ளது. ஓராண்டிற்கும் மேலாக இந்த மூன்று வெள்ளை காகங்களும் அதே பகுதியில் சுற்றி வருவதாகவும், இப்பகுதியில் உள்ள பொது மக்கள் சாப்பாடு மற்றும் தானியங்களை கொடுத்தால் சாப்பிட்டு விட்டு சுற்றித் திரிவதாகவும் கூறுகின்றனர்.

2026ல் சட்டப்பேரவை தேர்தலில்

பாஜ தலைமையில் தமிழகத்தில் கூட்டணி

ஜி.கே.வாசன் பேட்டி

காரைக்குடி, ஜூன் 3: சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் தமாகா தலைவர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துக்கணிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனை தாண்டி மக்கள் கணிப்புகளின் படி, இந்திய அளவில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப் பெரிய வெற்றி பெறும். மூன்றாவது முறையாக பாஜ ஆட்சி அமைத்து நல்லரசாக செயல்படும். இந்தியாவை வல்லரசாக மாற்றுவதுடன், நாட்டின் உயர்வில் எங்களுக்கும் பங்குண்டு. தனிமனிதர்கள் மதம் மற்றும் இறை ஈடுபாடு உடையவர்களாக இருக்கலாம்.

நாட்டின் நலனை கருதி தியானம் இருப்பது தனிமனித ஒழுக்கம். நேர்மை, எளிமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் கட்சி தமாகா என, மக்கள் அறிவார்கள். 2026ல் தமிழ் நாட்டில் நடக்கவுள்ள சட்டமன்ற தேர்தலில் பாஜ தலைமையில் நல்ல கூட்டணி அமையும்'' என்றார்.

ICICI Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை–400059, இந்தியா

கிளை அலுவலகம்: முதல் தளம், கதவு எண்: 66, ஜி.ஜி.டவர்ஸ், குமரன் சாலை, டவுன் ஹால் எதிரில், திருப்பூர்–641601.

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி ''உள்ளது உள்ளவிடத்தில்'', ''உள்ளது உள்ளவாறு'', மேலும் ''உள்ளது எதுவோ அது'' அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	லதா தமிழ்ச்செல்வன் (கடன்தாரர்), S.தமிழ்ச்செல்வன் (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCTN00001500850	வீடு கட்டப்பட்டுள்ள மனை எண்.201, ஸ்ரீ கணபதி நகர், சர்வே எண்.597/78, பம்மத்துக்குளம் கிராமம், ஆவடி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை	ரூ.33,27,813/– மே 30, 2024	Rs. 20,60,640/- / Rs. 2,06,070/-	ஜூலை 01, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக்** இணையதளத்தில் (URL **இணைப்பு**– https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு அறிவிப்பின் மூலம் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், முதல்** தளம், **கதவு** எண்: 66, **ஜி.ஜி.டவர்ஸ், குமரன் சாலை, டவுன்ஹால் எதிரில், திருப்பூர்–641601** என்ற இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) தங்கள் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்டப் பிரதியை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், முதல்** தளம், **கதவு** எண்: 66, **ஜி.ஜி.டவர்ஸ், குமரன் சாலை, டவுன்ஹால் எதிரில், திருப்பூர்–641601** என்ற இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **சென்னையில்** மாற்றத்தக்க வகையில் ''ICICI Home Finance Company Ltd– Auction'' என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300** இல் அல்லது எங்கள் **விற்பனை & சந்தைப்படுத்தும் கூட்டுதாரர் நெக்லென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டுக் காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைக் கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள்: ஜூன் 03, 2024
இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்